### விலை வீழ்ச்சியால் மாம்பழ விவசாயிகள் கடும் பாதிப்பு

# ஒன்றிய அரசு உதவிக் கரம் நீட்டுமா?

### மக்களவையில் - டி.ஆர். பாலு கேள்வி!

புதுடெல்லி, ஜூலை 24-

நடப்பு ஆண்டு மாம்பழ விளைச்சல் அதிகமாக உள்ள நிலையில் விலையில் கடும் வீழ்ச்சியும் விற்பனையும் முழுமையாக இல்லாததால் உரிய லாபம் கிடைக்காமல் மாம்பழ விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் கிடைத்த விலைக்கு விற்கும் கட்டாயத்துக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இதனைக் கருத்தில் கொண்டு மாம்பழ விவசாயிகள் நலன் காக்க ஒன்றிய, மாநில அரசுகள் எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன? இது போன்ற இன்னல்களை எதிர்கொள்ள மாம்பழ ஏற்றுமதி மை ஊக்குவிக்கவும் இன்ன பிற ஆதரவுகளை அளிக்கவும் மாங்கனி வாரியம் அமைக்கவும் அரசு முன்வருமா? என்று மக்களவையில் திமுக மக்களவைக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு கேள்வி எழுப்பினார்.

இதற்கு ஒன்றிய இணை அமைச்சர் ராம்நாத் தாக்கூர் நாடாளுமன்ற மக்களவையில் அளித்த எழுத்து பூர்வ பதிலில் நடப்பு மாம்பழ பருவத்தில் மாம்பழங்கள் விளைச்சல் சென்ற ஆண்டை விட 5 லட்சம் டன் அதிகமாக, 228.37 லட்சம் டன் அளவில் உள்ளது. தென் மாநிலங்களில் மாம்பழ விளைச்சல் இந்த ஆண்டு அதிக மானதால் விலை வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இது போன்ற சூழல்களில் மாம்பழ உற்பத்தியாளர்களுக்கு நிவாரணம் அளித்திட ஒன்றிய அரசின் “சந்தை இடையீடு திட்டம்” செயல் படுத்தப் படுகிறது . இத்திட்டத்தின் கீழ் விருப்ப ப் படும் மாநில அரசு உபரியாக உள்ள மாம்பழத்தை கொள்முதல் செய்து விவசாயி களின் இழப்பை சரி செய்யலாம். இதனால் ஏற்படும் நஷ்டத்தில் 50 விழுக்காடு வரை மாநில அரசுகள் ஏற்க முன்வர வேண்டும்.

மாம்பழ விளைச்சலை அதிகரிக்கவும் அதற்கு தக்க உத்திகள் தொடர்பான அறிவுரைகளையும் மாம்பழ விவசாயிகளுக்கு இந்திய வேளாண் ஆராய்ச்சி மையம் வழங்கி வருகிறது. மேலும், ஏற்றுமதி தொடர்பான உட்கட்டமைப்பு, பதப்படுத்தல் போன்றவைக்கு ஒன்றிய அரசின் வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்கள் மாம்பழ விவசாயிகளுக்கு ஏற்று மதிக்கு தேவையான உரிய உதவிகளை அளிக்கின்றன.

இவ்வாறு ஒன்றிய வேளாண் இணை அமைச்சர் தனது பதிலில் தெரிவித்தார். மாங்கனி வாரியம் அமைப்பது குறித்து எந்த தகவலையும் அமைச்சர் தனது பதிலில் கூறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

---

### சேலம் – அம்மாப்பேட்டையில்

# “உங்களுடன் ஸ்டாலின்” முகாமில் 17 மனுக்களுக்கு உடனடி தீர்வு!

### அமைச்சர் இரா.இராஜேந்திரன் நடவடிக்கை!

சேலம், ஜூலை 24-

“உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமில் இன்றைய தினம் மனு வழங்கிய 17 நபர்களின் மனுக்கள் மீது உடனடி தீர்வுகள் காணப்பட்டு நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன என்று முகாம் நடைபெறும் அம்மாப்பேட்டையில் சுற்றுலாத் துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்ட போது இதை தெரிவித்தார்.

சேலம் மாவட்டம், அம்மாப்பேட்டை மண்டலத்திற்குட்பட்ட வார்டு - 38, 39 பகுதிகளுக்கு செட்டிக்கார மண்டபத்தில் நேற்று முன்தினம் (22.07.2025) நடைபெற்று வரும் “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமினை சுற்றுலாத் துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, முன்னிலையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். பின்னர், சுற்றுலாத் துறை அமைச்சர் தெரிவித்ததாவது :

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் “உங்களுடன் ஸ்டாலின்” திட்டம் 15.7.2025 அன்று தொடங்கி வைக்கப்பட்டதை தொடர்ந்து சேலம் மாவட்டத்தில் “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாம் தொடங்கி நடைபெற்று வருகிறது. ”உங்களுடன் ஸ்டாலின்” என்ற திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டத்தில் 15.07.2025 அன்று முதல் வரும் நவம்பர் மாதம் வரை நகர்ப்புறப்பகுதிகளில் 168 முகாம்களும் மற்றும் ஊரகப் பகுதிகளில் 264 முகாம்களும் என மொத்தம் 432 சிறப்பு முகாம்கள் மூலம் பொதுமக்களின் கோரிக்கைகளுக்கு தீர்வு காணப்பட உள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள கடைகோடி மக்கள் அன்றாடம் அணுகும் அரசுத்துறைகளின் சேவைகள் வசிக்கும் பகுதிக்கு அருகாமையிலேயே சென்று வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். முதலமைச்சர் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தில் பெறப்படும் மனுக்கள் அனைத்திற்கும் 45 நாட்களுக்குள் தீர்வு காண வேண்டுமென உத்தரவிட்டுள்ளார்.

சேலம் மாவட்டத்தில் 15.07.2025 அன்று முதல் கடந்த 18.07.2025 அன்று வரை நடைபெற்ற”உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாம்களில் பல்வேறு துறைகளின் சார்பில் மொத்தம் 9,840 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டுள்ளன. இதுதவிர கலைஞர் மகளிர் உரிமைத் தொகை கோரிக்கை விண்ணப்பமாக மொத்தம் 11,188 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன.

இதன் தொடர்ச்சியாக, நேற்று முன்தினம் (22.07.2025) சேலம் மாநகராட்சி, அம்மாப்பேட்டை மண்டலம் வார்டு - 38, 39 பகுதிகளுக்கு அம்மாப்பேட்டை, தங்கம் தெரு, செட்டிக்கார மண்டபத்திலும், நகர்ப்புறத்தை ஒட்டியுள்ள கிராம ஊராட்சி, தளவாய்பட்டி பகுதிகளுக்கு உட்பட்டவர்களுக்கு தளவாய்பட்டி சமுதாயக்கூடத்திலும், தாரமங்கலம் நகராட்சி வார்டு 1, 2, 3க்குட்பட்ட பகுதிகளுக்கு ஜலகண்டாபுரம் பிரதான சாலையில் உள்ள பொன்னுசாமி திருமண மண்டபத்திலும், கொங்கணாபுரம் பேரூராட்சி வார்டு 1,2,3,4,5, 6,7,8,10க்குட்பட்ட பகுதிகளுக்கு ரங்கம்பாளையம் ஆனந்த மஹாலிலும், கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம், சித்திரைப் பட்டிபுதூர் பகுதிகளுக்கு கொளத்தூர் சோதனைச் சாவடி எஸ்.எஸ் மஹாலிலும், நங்கவள்ளி ஊராட்சி ஒன்றியம், சந்தை தானம் பட்டி பகுதிகளுக்கு கோனூர் ஊராட்சி அலுவலகத்திலும் நடைபெற்று வருகிறது.

சேலம் மாநகராட்சி, அம்மாப்பேட்டை மண்டலம் வார்டு - 38, 39 பகுதிகளுக்கு அம்மாப்பேட்டை, தங்கம் தெரு, செட்டிக்கார மண்டபத்தில் நடைபெற்ற முகாமில் மாற்றுத் திறனாளிகள் மற்றும் பொதுமக்கள் வழங்கிய மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை மேற்கொண்டு 7 நபர்களுக்கு குடிநீர் இணைப்புக்கான ஆணைகளையும், 3 நபர்களுக்கு சொத்துவரி பெயர் மாற்றம், 4 நபர்களுக்கு பிறப்புச்சான்றும், 1 நபருக்கு குடும்ப அட்டையும், 1 மாற்றுத்திறனாளிக்கு ரூ.16,500 மதிப்பிலான சக்கர நாற்காலியும், 1 மாற்றுத்திறனாளிக்கு ரூ.1,200 மதிப்பிலான ஊன்றுகோலும் என மொத்தம் 17 நபர்களின் மனுக்களுக்கு உடனடி தீர்வுகள் காணப்பட்டு நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

இம்முகாம்களில் பொதுமக்கள் எவ்வித சிரமமும் இன்றி தங்களது கோரிக்கை மனுக்களை வழங்கிட ஏதுவாக மேற்கொள்ளப்பட்டுள்ள அடிப்படை வசதிகள் குறித்து நேரில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இவ்வாறு சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்தார்.

---

### கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில்
### திராவிட மாடல் ‘2.o’ ஆட்சி மீண்டும் அமையப் போவது உறுதி!

# எதிரிகளின் பயமே நமது வெற்றி!

### ‘ஓரணியில் தமிழ்நாடு’ கழக உறுப்பினர் சேர்க்கை குறித்து – கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அறிக்கை!

சென்னை, ஜூலை 24-

கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

தமிழ்நாட்டின் மண் மொழி மானம் காத்திடும் பொருட்டு ஓரணியில் தமிழ்நாடு பரப்புரையை முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் ஜூலை 1 ஆம் தேதி தொடங்கி வைத்தார். அவர் தொடங்கி வைத்த நாள் முதல் ஒன்றிய பா.ஜ.க. அரசின் வஞ்சக சூழ்ச்சியையும், அடிமை அ.தி.மு.க.வின் துரோகங்களையும் கண்டு வெறுத்துப் போய் இருக்கும் தமிழ்நாட்டு மக்கள் முதல்வர் பின்னால் ‘ஓரணியில் தமிழ்நாடு’ என அணி அணியாய் அணிவகுத்து நிற்கத் தொடங்கினர். அதோடு எல்லார்க்கும் எல்லாம் என்ற உயரிய நோக்கோடு திராவிட மாடல் அரசின் நலத்திட்டங்கள் சென்று சேராத குடும்பங்களே கிடையாது என்ற அளவிற்கு முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு குடும்பத்தையும் பார்த்து பார்த்துக் கவனித்து வருவதால் தமிழ்நாட்டு மக்கள் குடும்பம் குடும்பமாக கழகத்தில் இணைந்து வருகின்றனர்.



தமிழ்நாட்டின் அனைத்துத் தரப்பு மக்களும், அ.தி.மு.க. வினருமே கூட மாண்புமிகு முதலமைச்சர் பின்னால் அணிதிரள்வதைக் கண்டு தாங்க முடியாமல் அரண்டுபோய் அவதூறுகளைப் பரப்பி மக்களைக் குழப்ப பார்த்து அதில் தோற்றுப்போனதால் , நீதிமன்றத்திற்குச் சென்று ‘ஓரணியில் தமிழ்நாடு’பரப்புரையை எப்படியாவது தடுக்க முடியாதா என தவம் கிடந்தார் பழனிசாமி. நீதிமன்றத்தை நாடி தடைவாங்க முயன்ற அ.தி.மு.க.விற்கு மாண்பமை நீதிமன்றம் ‘ஓரணியில் தமிழ்நாடு’ உறுப்பினர் சேர்க்கைக்கு தடை விதிக்க முடியாது எனக் கூறி பழனிசாமி முகத்தில் கரியைப் பூசிவிட்டது. மேலும் OTP மட்டும் கேட்காமல் வழக்கம் போல உறுப்பினர் சேர்க்கையை மேற்கொள்ள அனுமதித்துள்ளது நீதிமன்றம். இப்படி கழக உறுப்பினர் சேர்க்கையை எப்படியாவது தடுக்க வேண்டும் என்ற பழனிசாமியின் பதட்டமே ஓரணியில் தமிழ்நாடு பரப்புரை எந்த அளவிற்கு மக்களிடம் சென்றுள்ளது என்பதை வெளிச்சம் போட்டு காட்டுகிறது.

கழக உறுப்பினர் சேர்க்கையைத் தடுக்க நினைத்த அதிமுக, பா.ஜ.க.வின் சதிச் செயலை நீதிமன்றமே முறியடித்த பின்னும், “சீப்பை ஒளித்து வைத்துவிட்டு கல்யாணத்தை நிறுத்தி விட்டோம்” என்ற வகையில் OTP பெறுவதை தடுத்து விட்டோம் என கூப்பாடு போடுகிறது அடிமைகள் கூட்டம். வேடிக்கை.!

திராவிட மாடல் அரசின் நலத்திட்டங்கள் மற்றும் சிறப்பான ஆட்சியை முன்வைத்து தன்னெழுச்சியாக பொது மக்கள் தங்களை கழக உறுப்பினராக இணைத்து வருகின்றனர். அதில் OTP பெறுவது என்பது உறுதிப்படுத்தலுக்கான ஒரு சிறு நடைமுறை மட்டுமே. எனினும் நீதிமன்ற வழிகாட்டலை மதித்து அந்த நடைமுறைக்கு மாற்றாக கீழ்க்காணும் நடைமுறையை கடைப்பிடித்து உறுப்பினர் சேர்க்கையை மேற்கொள்ளுமாறு கழக உடன் பிறப்புகளுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

**புதிய வழிமுறைகள்:**

மக்களுடன் ஸ்டாலின் App ஐ அனைவரும் Update செய்து கொள்ளுங்கள்.

1) OTP கேட்கும் முறை தற்போது இல்லை.

2) அலைபேசி எண் கட்டாயம்.

3) தற்போதைக்கு, ஒரு குடும்பத்திற்கு ஒரு போன் நம்பரில் 1:4 என்ற அடிப்படையில் உறுப்பினர்களைச் சேர்க்கலாம்.

ஒரு குடும்பத்திற்கு ஒரு அலைபேசி எண் என்ற முறை வந்துள்ளது. ஆனால் வாய்ப்பு இருக்கும் இடங்களில் கிடைக்கின்ற அனைத்து அலைபேசி எண்களையும் பெற்றுக் கொள்ளவும்.

அலைபேசி எண் தவறாகவோ அல்லது அந்தக் குடும்பத்தில் இல்லாத நபரின் எண்ணாகவோ இருந்தால், உறுப்பினர் சேர்க்கை மேற்கொண்ட அனைத்துத் தரவுகளும் நீக்கப்பட்டு இப்பணியை மீண்டும் தொடக்கத்தில் இருந்து தொடங்கிட வேண்டும் என்பதால் பெறப்படும் அலைபேசி எண்ணின் உண்மைத்தன்மையை உறுதி செய்து கொள்வது அவசியம்.

அலைபேசி எண்ணைப் பதிவிட்டு சமர்ப்பித்தால் உறுப்பினர் சேர்க்கை முடிவடையும். அனைத்து வாக்காளர்களையும் சந்தித்து முழுமையாக கணக்கெடுப்புகளை முடிக்க வேண்டும்.

எதிரிகளின் பயமே நமது வெற்றி. 2026 லும் கழகத் தலைவர் அவர்களது தலைமையில் திராவிட மாடல் 2.o ஆட்சி அமைவது உறுதி.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

---

### அரியலூர் மாவட்டத்தில்

# ரூ.9.28 கோடி மதிப்பீட்டில் புதிய வளர்ச்சித் திட்டப்பணிகள்!

### அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்!

அரியலூர், ஜூலை 24-

அரியலூர் மாவட்டம், அரியலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ரூ.9.28 கோடி மதிப்பீட்டில் 34 புதிய வளர்ச்சித் திட்டப்பணிகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா கலந்து கொண்டார்.

முதலமைச்சர்மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவிற்கிணங்க, அரியலூர் மாவட்டத்தில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வகையில் கிராம சாலைகளை மேம்படுத்துதல், மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் அமைத்தல், பள்ளி வகுப்பறைகள் கட்டுதல், அங்கன்வாடி மையக் கட்டடங்கள் கட்டுதல், போர்வெல்மற்றும்சிமெண்ட் தொட்டி அமைத்தல், கதிரடிக்கும் களம் அமைத்தல், குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்தல், ஏரிகள் புனரமைத்தல் உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சித் திட்ட பணிகள் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்த வகையில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அரியலூர் சட்டமன்ற தொகுதி, அரியலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டுகளில் ரூ.9.28 கோடி மதிப்பீட்டில் 34 புதிய வளர்ச்சித் திட்டப் பணிகளை துவக்கி வைத்தார்.

அதன்படி அரியலூர் நகராட்சி வார்டு 2க்குட்பட்ட சத்யாநகர் பகுதியில் ரூ.11.39 இலட்சம் மதிப்பீட்டில் 328 மீட்டர் சாலை அமைக்கும் பணியையும், ரூ.21.62 இலட்சம் மதிப்பீட்டில் 328 மீட்டர் மழைநீர் வடிகால் அமைக்கும் பணியையும் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்.

பின்னர், பெரியார் நகர் 6வது வார்டில் ரூ.4.26 இலட்சம் மதிப்பீட்டில் ஆழ்துளை கிணறு செயல்பாட்டை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு துவக்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து, அழகப்பா நகர் 2வது தெருவில் ரூ.6.25 இலட்சம் மதிப்பீட்டில் 180 மீ சாலை அமைக்கும் பணியையும், அழகப்பா நகர் 3வது தெருவில் ரூ.5.52 இலட்சம் மதிப்பீட்டில் 179 மீ சாலை அமைக்கும் பணியையும், பின்னர், 8வது வார்டு கருத்தான்தெருவில் ரூ.7.07 இலட்சம் மதிப்பீட்டில் 172 மீ சாலை அமைக்கும் பணியையும், தொடர்ந்து ரூ.287 இலட்சம் மதிப்பீட்டில் காந்தி மார்க்கெட் புதிய கட்டடம் கட்டும் பணியையும் துவக்கி வைத்து, பணிகளை தரமாகவும், விரைவாகவும் முடித்து பயன்பாட்டிற்கு கொண்டுவர சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்;.

அதனைத்தொடர்ந்து, வார்டு எண்.11, செல்லமுத்து தெருவில் ரூ.7.16 இலட்சம் மதிப்பீட்டில் 220 மீ சாலை அமைக்கும் பணியையும், பின்னர் புதுத்தெருவில் ரூ.6.29 இலட்சம் மதிப்பீட்டில் 153 மீட்டர் சாலை அமைக்கும் பணியையும், தொடர்ந்து, அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளியில் ரூ.216 இலட்சம் மதிப்பீட்டில் கூடுதல் வகுப்பறை கட்டடம் கட்டும் பணியையும், பின்னர், வார்டு எண்.14 சஞ்சீவிராயன் கோயில் தெருவில் ரூ.9.77 இலட்சம் மதிப்பீட்டில் 300 மீட்டர் சாலை அமைக்கும் பணியையும், சிட்டிபாபு தெருவில் ரூ.8.32 இலட்சம் மதிப்பீட்டில் 270 மீட்டர் சாலை அமைக்கும் பணியையும், பின்னர், வார்டு எண்.13 பெருமாள் கோவில் தெருவில் ரூ.7.19 இலட்சம் மதிப்பீட்டில் 233 மீட்டர் சாலை அமைக்கும் பணியையும், தொடர்ந்து வார்டு எண்.14 கைலாசநாதர் கோவில் தெருவில் ரூ.8.19 இலட்சம் மதிப்பீட்டில் 220 மீ சாலை அமைக்கும் பணியை துவக்கி வைத்து பணிகளை உரிய காலத்திற்குள் முடித்திட சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

அதனைத்தொடர்ந்து, வார்டு எண்.11, விளாங்காரத் தெருவில் ரூ.3.76 இலட்சம் மதிப்பீட்டில் 122 மீ சாலை அமைக்கும் பணியையும், தொடர்ந்து ரூ.8.79 இலட்சம் மதிப்பீட்டில் விளாங்காரத் தெருவில் 122 மீ மழைநீர் வடிகால் வாய்க்கால் அமைக்கும் பணியையும், பின்னர், வார்டு எண்.8, சபாபதி தெருவில் ரூ.5.7 இலட்சம் மதிப்பீட்டில் 175 மீ சாலை அமைக்கும் பணியையும், தொடர்ந்து சாம்பசிவம் தெருவில் ரூ.9.44 இலட்சம் மதிப்பீட்டில் சாலை அமைக்கும் பணியையும். பின்னர், சீனிவாசன் தெருவில் ரூ.2.18 இலட்சம் மதிப்பீட்டில் 67 மீட்டர் சாலை அமைக்கம் பணியையும், தொடர்ந்து, குறிஞ்சான் குளத் தெருவில் ரூ.7.05 இலட்சம் மதிப்பீட்டில் 203 மீட்டர் சாலை அமைக்கும் பணியையும், பின்னர் வார்டு எண்.12, மேல அக்ரஹாரம் தெருவில் ரூ.16.64 இலட்சம் மதிப்பீட்டில் 405 மீட்டர் சாலை அமைக்கும் பணியையும், தொடர்;ந்து, ரூ.13.43 இலட்சம் மதிப்பீட்டில் மேல அக்ரஹாரம் தெருவில் 436 மீ சாலை அமைக்கும் பணியையும், பின்னர், ரூ.13.35 இலட்சம் மதிப்பீட்டில் மேல அக்ரஹாரம் குறுக்கு தெருவில் 410 மீ சாலை அமைக்கும் பணியையும், தொடர்ந்து, மேல அக்ரஹாரம் தெருவில் (குபேரன் நகர்) ரூ.13.35 இலட்சம் மதிப்பீட்டில் 214 மீ சாலை அமைக்கும் பணியையும் துவக்கி வைத்து பணிகளை தரமான கட்டுமானப் பொருட்களை கொண்டு விரைவாக முடித்திடசம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அறிவுறுத்தினார்.

அதனைத்தொடர்ந்து, வார்டு எண்.13, எஸ்.ஆர். நகரில் ரூ.23.82 இலட்சம் மதிப்பீட்டில் 300 மீட்டர் சாலை அமைக்கும் பணியையும், பின்னர், வார்டு எண்.16, கல்லக்குடி தெருவில் ரூ.14.71 இலட்சம் மதிப்பீட்டில் 332 மீ சாலை அமைக்கும் பணியையும் துவக்கி வைத்தார். பின்னர், வார்டு எண்.16 கண்ணுசாமி தெருவில் ரூ.4.26 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளை கிணறு செயல்பாட்டினை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். தொடர்ந்து, வார்டு எண்.17, சடையப்பர் தெருவில் ரூ.22.24 இலட்சம் மதிப்பீட்டில் 502 மீட்டர் சாலை அமைக்கும் பணியையும், தொடர்ந்து எண்ணெய்காரத் தெருவில் ரூ.9.57 இலட்சம் மதிப்பீட்டில் 233 மீட்டர் சாலை அமைக்கும் பணியையும், பின்னர், வார்டு எண்.15, கீழத்தெருவில் ரூ.7.18 இலட்சம் மதிப்பீட்டில் 233 மீ சாலை அமைக்கும் பணியையும், தொடர்ந்து, ரூ.98 இலட்சம் மதிப்பீட்டில் நகராட்சி அலுவலகம் அருகில் வாரச்சந்தை பகுதி 2 சாலை அமைக்கும் பணியையும், பின்னர், வார்டு எண்.15, சிந்தாமணி தெருவில் ரூ.6.94 இலட்சம் மதிப்பீட்டில் 225 மீ சாலை அமைக்கும் பணியையும், வார்டு எண்.18, பெரிய தெருவில் ரூ.7.97 இலட்சம் மதிப்பீட்டில் 180 மீ சாலை அமைக்கும்பணியையும், தொடர்ந்து மின்நகரில் ரூ.34.08 இலட்சம் மதிப்பீட்டில் 1105 மீ சாலை அமைக்கும் பணிகள் என மொத்தம் ரூ.9.28 கோடி மதிப்பீட்டில் 34 புதிய வளர்ச்சித்திட்டப்பணி களை தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சிகளில் அரியலூர் நகர்மன்ற தலைவர் சாந்தி கலைவாணன், அரியலூர் நகராட்சி ஆணையர் (பொ) அசோக்குமார், அரியலூர் நகர்மன்ற துணைத்தலைவர் கலியமூர்த்தி, அரியலூர் நகராட்சி பொறியாளர்(பொ) ராஜகோபாலன், நகர கழக செயலாளர் இரா.முருகேசன், பொதுக்குழு உறுப்பினர் இரா. பாலு,அரியலூர் நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி. லூயிகதிரவன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் க. அருண்ராஜா, அரியலூர் தொ.மு.ச. செயலாளர் பி.வி.அன்பழகன், முன்னாள் நகர் மன்ற தலைவர் விசயலட்சுமி செல்வராஜ்,

கழக நிர்வாகிகள் இராஜேந்திரன், மாலா தமிழரசன், குணா, ராமு, குமார், கழக வழக்கறிஞர்கள் கதிரவன், இராஜா, பாலா,அன்பழகன், பரமேஸ்வரன், இதர அரசு அலுவலர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.



கோவை தெற்கு மாவட்டம், செட்டிபாளையம் பேரூராட்சி, சமத்துவபுரம் அருகில் பொள்ளாச்சி பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சி திட்டம் 2024 – 2025 கீழ் ரூபாய் 8 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பேருந்து நிழற்குடையை பொது மக்கள் பயன்பாட்டிற்கு தளபதி முருகேசன் திறந்து வைத்தார். இதில் பவித்ரா, கனகராஜ், விஜயசேகரன், ராஜு, மாசிலாமணி, பன்னீர்செல்வம், ரங்கசாமி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

---

### திருத்துறைப்பூண்டி ஒன்றியம் தண்டலச் சேரியில் திருவாரூர் மாவட்ட

# தி.மு.க. இளைஞர் அணி சார்பில் கலைஞர் நூலகம் திறப்பு விழா!

### பூண்டி கலைவாணன் - நா.இளையராஜா-சி.ஆனந்தகுமார் பங்கேற்பு!

திருவாரூர்,ஜூலை 24-

திருவாரூர் மாவட்ட திமுக இளைஞரணி சார்பில் திருத்துறைப்பூண்டி ஒன்றியம் தண்டலச்சேரியில் இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள் வினோத்குமார், எம்.பி.எடிசன் மற்றும் இளைஞர் அணியின் நிர்வாகிகள் ஏற்பாட்டில் கலைஞர் நூலகம் அமைக்கப்பட்டு, தாட்கோ தலைவர் மாநில இளைஞர் அணி துணை செயலாளர் நா. இளையராஜா தலைமையில், மாவட்ட செயலாளர் பூண்டி கலைவாணன் எம்.எல்.ஏ.வால் திறந்து வைக்கப்பட்டது. முதல்வர் திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழிகாட்டுதலின்படியும், தி.மு.க. இளைஞரணி செயலாளர், தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆலோசனைகளின்படியும், தமிழ்நாடு முழுவதும் இளைஞர் அணியின் சார்பில் பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் பயன்பாட்டிற்கு என கலைஞர் நூலகங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

அதன் தொடர்ச்சியாக திருவாரூர் மாவட்ட திமுக இளைஞரணி சார்பில் திருத்துறைப்பூண்டி ஒன்றியம் தண்டலச்சேரி அரசு கலை கல்லூரியின் எதிர்புறம் இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள் வினோத்குமார், எம்.பி.எடிசன் மற்றும் இளைஞர் அணியின் நிர்வாகிகள் ஏற்பாட்டில் கலைஞர் நூலகம் அமைக்கப்பட்டு, தாட்கோ தலைவர் மாநில இளைஞர் அணி துணை செயலாளர் நா. இளையராஜா தலைமையில், மாவட்ட செயலாளர் பூண்டி கலைவாணன் எம்.எல்.ஏ.வால் திறந்து வைக்கப்பட்டது.

மாநில இளைஞர் அணி துணை செயலாளர் சி.ஆனந்த்குமார்,மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பணங்குடி ஏ. எஸ். குமார், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் வி.கே.எம்.முருகானந்தம், தாகிர் அலி, மாவட்ட துணை செயலாளர் எம். எஸ்.கார்த்திக், தலைமை செயற்குழு உறுப்பினர் ஆர். எஸ்.பாண்டியன், மாவட்ட விளையாட்டு அணி அமைப்பாளர் எம்.என். ராஜா உள்ளிட்டோர் முன்னிலை ஏற்றனர்.

நிகழ்வில் ஒன்றிய செயலாளர்கள் ப.பிரகாஷ், வீ. எஸ்.ஆர்.தேவதாஸ், பால. ஞானவேல்,இரா.மனோகரன், பொதுக்குழு உறுப்பினர் செல்வ. ஜெயதேவன், முன்னாள் ஒன்றியச் செயலாளர் முகில்.ராஜேந்திரன், ஒன்றிய துணை செயலாளர் சேது முருகானந்தம் ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர்கள் வெங்கடேஷ்குமார், ஏ.எம்.பரமேஷ், ஸ்ரீதர், விஷ்வா,விவேக், வினோத், நகர இளைஞரணிப்பாளர் வசந்த், பேரூர்அமைப்பாளர் தீன்முகமது , மற்றும் கோட்டூர் இளைஞரணி அமைப்பாளர்கள் பாலா, ரவீந்திரன், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் ப.பாஸ்கர் ஒன்றிய விவசாய அணி அமைப்பாளர் புஷ்பநாதன், தகவல் தொழில் நுட்ப அணி சீனிகுமார், ஒன்றிய கழக நிர்வாகிகள், நகர கழக நிர்வாகிகள், கழகத் தோழர்கள், மற்றும் இளைஞர் அணியினர், மாணவ - மாணவிகள் பெருந் திரளாக பங்கேற்றனர்.